**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.43/2020-PW-1**

| Name | திரு.சஞ்சீவ் குமார் |
|---|---|
| Father Name | திரு.சந்திரசேகரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.11.2025.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

2–ம் பிரதிவாதி என்னால் நியமிக்கப்பட்ட பொது அதிகார முகவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரம் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 01.11.2017 தேதியிட்ட பொது அதிகார ரத்து ஆவணம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். வழக்கிற்காக இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த ஆவணம் ஏற்படும் போது வழக்கு நிலுவையில் இல்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தை போலியாக வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. வா.சா.ஆ.18 பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக ஞாபகமில்லை என பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தேவையில்லாமல் சேர்த்திருக்கிறேன் என்றாலும், அவர்களுக்கு எதிராக வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 2–ம் பிரதிவாதிக்கு நான் கொடுத்திருந்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய சொல்லி என் வழக்கறிஞர் மூலம் அவருக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. நான் அது போன்ற சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2–ம் பிரதிவாதிக்கு நான் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி தொகை ரூ.3,54,07,347/–ஐ கொடுப்பதை தவிர்ப்பதற்காக இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பதிவு செய்யப்பட்ட பொது அதிகார முகவர் என்ற முறையில் 2–ம் பிரதிவாதி கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்திருப்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும், என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் சரியல்ல. நான் தான் சட்ட விரோதமாக வழக்கு சொத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றாலும், நான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை 4–ம் பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்குரையின் முதலாவது பரிகாரத்தை கேட்க எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. முதல் பரிகாரத்தை கேட்க

எனக்கு தகுதியில்லை என்பதால் 2–வது பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் உண்மையான உரிமையாளர் 4–ம் பிரதிவாதி தான் என்றால் சரியல்ல. இந்த வழக்கு இந்நீதிமன்ற அதிகார வரம்புக்குள் விசாரித்தக்க வழக்கு அல்ல என்றால் சரியல்ல. சொத்திற்கான வழிகாட்டு மதிப்பின் படி என்னுடைய வழக்கை மதிப்பீடு செய்யாமலும், சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாமலும் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான சரியான மதிப்பீட்டிற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் உள்ள பிரச்சனை ஏற்கனவே சென்னை மாஸ்டர் நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்ட பிறகும், 2–ம் பிரதிவாதியை தேவையில்லாமல் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக என்னால் ஜோடனை செய்து தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 மின்கட்டண ரசீது 2017–ம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.23 சொத்து வரி ரசீதுகள் 2018–ம் ஆண்டு வழங்கப்பட்டத என்றால் சரிதான். என்னுடைய வழக்கு பொய்யான வழக்கு என்றாலும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.